**சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும்**
(பாகம் - 15)

# பொலிஸ் அதிகாரங்கள் சட்டத்தில் இருக்கிறது அமுலில் இல்லை

**(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B.)**

**இ**ன்று பலராலும் வினவப்படும் ஒரே விடயம் " 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இருக்கின்றதா அல்லது இல்லையா? " என்பதாகும். இருக்குமானால் அவற்றை அமுல்படுத்துவதில் என்ன தயக்கமுள்ளது. இதற்கான பதில் அரசுகள் அதிகாரத்தைப் பரவலாக்குவதில் மட்டும் குறியாக இருப்பதற்கான சூத்திரம் என்னவெனில் தென்னிலங்கையிலுள்ள பெரிய கட்சிகள் சிறுபான்மையினரை எப்போதும் தங்களின் தயவிலேயே தங்கியிருக்கவும் வாழவும் வைத்திருப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கும் நோக்கத்தினாலேயாகும். அதிகாரப் பரவலாக்கலில் பாராளுமன்றம் நினைத்தால் மட்டும் கொடுக்கும் அல்லது கொடுத்ததையும் தடுத்து நிறுத்தும். தேவையானால் கொடுத்ததை திரும்ப எடுத்துவிடும். எல்லாம் பாராளுமன்றத்தின் தயவிலேயே தங்கியுள்ளது. பாராளுமன்றமானது என்றும் சிங்களயினப் பெரும்பான்மை பிரதிநிதிகளைக் கொண்டதாகவே இருக்கும். அதனாலே அதை சாத்தியமாக்குவது மிகச்சுலபமாகவுள்ளது. அதனாலேதான் தமிழ் மக்களின் தலைவர்கள் அதிகாரப் பகிர்வினைப் பெறுவதில் ஆர்வமாகவுள்ளனர். அதிகாரப் பகிர்வில் இவ்வாறு கொடுத்ததை நிறுத்தவும் அல்லது மீளப்பெறவும் முடியாது. 13வது திருத்தச் சட்டத்தின்படி மாகாணங்களில் அமுலாக்கப்படத் தேவையுள்ள "காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள்" பற்றியதில் இந்தக் கட்டுரையில் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபையில் எவ்வாறு அமைந்திருக்க வேண்டியது எனக் கூறி இருப்பதைப் பாப்போம்.

## 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் பொலிஸ் அதிகாரங்கள்

1978ம் ஆண்டைய அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தின் மாகாண சபைக்கான நிரல் 1 இல் பின்னிணைப்பு 1 "சட்டமும் ஒழுங்கும்" என்ற தலைப்பில் பொலிஸ் அதிகாரங்கள் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தினுள் பொதுஒழுங்கும் பொலிசுத் தத்துவங்களைப் பிரயோகித்தலும் மாகாண சபைக்கு ஒதுக்கியிருந்தாலும் **(1) தேசிய பாதுகாப்பு சம்பந்தமாகவும் (2) தேசிய பந்தோபஸ்து சம்பந்தமாகவும் (3) இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆயுதம் தாங்கிய படைகள் அல்லது குடியியல் தத்துவ உதவியாகப் பயன்படுத்தும் வேறு எவையேனும் படைகள் சம்பந்தமானவையும்** மாகாணத்தின் பொலிஸ் அதிகாரத்தினுள் உள்ளடக்கப்படமாட்டாது எனக் கூறப்பட்டுள்ளது.

**பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி** (பொலிஸ் மா அதிபர்) (I.G.P.) இலங்கைப் பொலிஸ் படையின் தவைராகவிருப்பார். இலங்கைப் பொலிஸ் படையை (அ). (சிறப்புக்கூறுகள் உள்ளிட்ட) **தேசியப் பகுதி** என்றும் (ஆ). **மாகாணப் பகுதி** என்றும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது. தேசியப் பகுதி மத்திய அரசின் செயற்பாட்டிற்கும் மாகாணப் பகுதி மாகாண சபையின் செயற்பாட்டுக்குமாக பொறுப்பாகவிருக்கும். **தேசியப் பகுதி** பொலிஸ் மா அதிபர் (I.G.P.) தலைமையிலும் **மாகாணப் பகுதி** பிரதி பொலிஸ் மா அதிபர் (D.I.G.) தலைமையிலும் இயங்கும்.
**நியமனங்கள்.**

மாகாண சபைக்குப் பொறுப்பாக தலைமை தாங்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் (P.D.I.G.) நியமனம் பொலிஸ் மா அதிபரினால் **அம்மாகாண முதலமைச்சரின் ஒருப்பாட்டுடன் (இணக்கத்துடன்)** மட்டுமே நியமிக்கப்படல் வேண்டும். அவ்வாறான கருத்தொருமைப்பாடு காணாப்படாதவிடத்து அதுபற்றி சனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டு சனாதிபதி முலமைச்சருடன் கலந்தாலோசித்து நியமனம் நடைபெறும். மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் சிரேஸ்ட பொலிஸ் சுப்பிரின்டன்களையும் (S.S.P.) பொலிஸ் சுப்பிரின்டன்களையும் (S.P.) உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன்களையும் (A.S.P.) ஆகியோர்களை மத்திய அரசு தேசிய பகுதியிலிருந்து மாகாண பகுதிக்கு மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்டவர்களாக மாகாண சபையில் கடமையாற்ற நியமிக்கப் படுவார்கள். மாகாணப் பிரதி பொலிஸ் மா அதிபர் மாகாண முதலமைச்சரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவே செயலாற்ற வேண்டும். தேசியப் பகுதியிலிருந்து மாகாணப் பகுதிக்கு மாற்றுச்சேவைக்கு விடுவிக்கப்பட்டு வந்தவர்களை தவிர மாகாணத்தில் ஆட்சேர்ப்பின் மூலம் திரட்டப்பட்டவர்களாக மாகாண உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன்கள் (P.A.S.P.) பிரதான பரிசோதகர்கள் (Chief Inspector) பரிசோதகர்கள் (Inspectors) உதவிப் பரிசோதகர்கள் (Sub Inspectors) சார்ஜண்டகள் (Sargent ) கொஸ்தாப்புகள் (Constables) ஆகிய பதவிகளுக்கு நியமனங்கள் மாகாணசபையினால் வழங்கப்படும். தேசியப் பகுதியிலிருந்து மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்டு வந்தவர்களுடன் மாகாணத்தில் திரட்டப்பட்டவர்களும் ஒன்றிணைந்து மாகாணக் கடமையில் ஈடுபடுவார்கள். மாகாண சபை நியமனத்தினால் சேர்க்கப்பட்டவர்கள் தேசிய பகுதிக்கு முதுமை அடிப்படையில் பதவியுயர்வுக்கு தகுதியுடையவர்களாவார்கள்.

**தேசிய பொலிஸ் ஆணைக்குழு**

இது மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். அவர்கள் 1) பொலிஸ் மா அதிபர் 2). சனாதிபதியின் கலந்தாலோசனையுடன் பகிரங்கச் சேவை ஆணைக் குழுவினால் நியமிக்கப்படும் ஓருவர் (P.S.C. Appointee). 3) பிரதம நீதியரசரினால் நியமிக்கப்படும் ஒருவர் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்டது.

**மாகாண பொலிஸ் ஆணைக்குழு**

மாகாண சபைக்கான ஆட்சேர்த்தல்கள் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட மாகாண பொலிஸ் ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்படும். அவர்கள் 1). மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் (P.D.I.G.). 2). பகிரங்கச் சேவை ஆணைக்குழுவினால் சனாதிபதியின் கலந்தாலோசணையோடு நியமிக்கப்படும் ஓருவர் (P.S.C. Appointee). 3). மாகாண முதலமைச்சரினால் நியமிக்கப்படும் ஒருவர் என மூவராவர்.

**மாகாண பொலிஸ் ஆணைக்குழுவின் ஏனைய தொழிற்பாடுகளாவன**:

மாகாணப் பகுதி பொலிஸ் அலுவலர்களின் (1). இடமாற்றங்கள். (2). பதவியுயர்வுகள். (3). ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு (4). தேசிய பகுதியிலிருந்து மாகாணப் பகுதிக்கு மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்டவர்களான தேசியபகுதியின் அலுவலர்களை சிரேஸ்டபொலிஸ் சுப்பிரின்டன் பதவித் தரம் வரையில் (S.S.P.) பதவி உயர்த்துவதற்கும். (5). மாகாண சபை பிரதிப் பொலிஸ் மா அதிபரைத் தவிர ஏனைய மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப் பட்டவர்களினது இடமாற்றம் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு.

ஆயினும் தேசியப் பகுதியிலிருந்து மாகாணத்தில் மாற்றுச் சேவையிலுள்ள அலுவலர்கள் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு சம்பந்தமாக மாகாண பொலிஸ் ஆணைக்குழுவின் முடிவுக்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்ய உரித்திருக்கும் என்பதோடு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் முடிவே இறுதியானதாக இருக்கும்.

**ஊழியர் கோப்பு** ஓவ்வொரு மாகாணப் பகுதியினதும் அலுவலர்களினதும் வேறு பதவித் தரத்தினரதும் ஊழியர் கோப்பு (அ) மாகாணத்தின் பரப்பளவு (ஆ)

மாகாணத்தின் சனத்தொகை (இ) உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறான அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அளவைக் கட்டளைகள் ஆகியவற்றை கருத்திற் கொண்டு சனாதிபதியின் அங்கீகாரத்துடன் மாகாண நிர்வாகத்தினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். இந்நெறிகள் எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் ஒரே சீராக இருத்தல் வேண்டும்.

மாகாணப் பகுதிகளின் ஊழியர் கோப்புக்களானவை சனத்தொகை பரப்பளவு சம்பந்தப்பட்ட மாகாணத்தில் பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை போன்ற நிச்சயிக்கப்பட்ட நெறிகளையும் வேறு இயைபான காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். இந்நெறிகள் எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் பாகுபாடு இன்றி ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

மாகாணத்தில் கடமையாற்றும் தேசியப் பகுதி மாகாணப் பகுதிகளிலுள்ள பல்வேறு பதவித்தரத்தினராலும் துய்க்கப்படும் சம்பள அளவுத்திட்டங்களும் அலுவலக மேலதிக வருவாய்களும் மாகாணங்களின் முதலமைச்சர்களை கலந்தாலோசித்தபின்னர் இலங்கை அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

மாகாணப் பகுதிகளின் உறுப்பினர்களால் துய்க்கப்படும் சம்பள அளவுத் திட்டங்களும் அலுவலக மேலதிக வருவாய்களும் எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் ஒரே சீராக ஏற்புடையதாகவிருத்தல் வேண்டும்.

**சுடுபடைக்கலங்கள் வெடிமருந்துகள்** சுடுபடைக்கலங்களும் வெடிமருந்துகளும் வேறு சாதனங்களும் அவற்றின் தன்மையும் வகையும் அளவும் மாகாணப் பொலிஸ் ஆணைக் குழுவுடன் கலந்தாலோசித்ததின் பின்னர் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் என்றும் எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் ஒரே சீரான தரங்களும் நெறிகளும் இருக்கவேண்டும்.

**மாகாணப் பகுதிக்கான பொலிஸ் ஆட்சேர்ப்பு** மாகாணப் பகுதிக்கான ஆட்சேர்ப்பு பொலிஸ் கொஸ்தாப்பல் (P.C.) உதவிப் பரிசோதகர் (S.I.) மாகாண உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் (A.S.P.) ஆகிய தரங்களுக்கு மட்டும் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(தொடரும்)